Register as a N
paper eylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
38-ம் திகதி தாபிதம்.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ௫௫] யாழ்ப்பாணம்:—சுபானு௵ புரட்டாதி௴ ௧௮௳ (1943 அக்ரோபர்௴ 4 திங்கட்கிழமை) [இல. ௫௦

## வசாவிளான் அநர்த்தம்

### நீதித்தலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்

சென்ற புதன்கிழமை மல்லாகம் நீதித்தலத்தில், யாழ்ப்பாணம் உப பொலிஸ்தலைவரால் குற்றம் பாரிக்கப்பட்டோராய் 104 கூலியாளர் கொண்டுவரப்பட்டனர். தொழிலாளர் தங்களுக்கு நியாயவாதிகள் ஏற்படுத்தப்படவில்லையென முறையிட்டனர்.

விசாரணையின்போது முதற் கூப்பிடப்பட்ட சாட்சியாகிய வல்லிபுரம் சபாபதிப்பிள்ளை கூறியதாவது:-

"எனக்கு வயசு35; என்தொழில் பயிரிடுதல், அதனோடு வசாவிளானில் ஒரு கடையும் வைத்து நடத்துகிறேன்; குறித்த தினத்தன் றுபின்னேரம் நாலு ஐந்து மணி வரையிலிருக்கும், வசாவிளான் சந்தியில் கதிராசிப்பிள்ளை யென்னும் பெண்ணின் கடைக்கெதிரில் நான் இராமலிங்கமென்பவரைச் சந்தித்தேன்; அந்தக் கடையில தொழிலாளரும் நாலு ஐந்து பேர் வரையில் இருந்தார்கள். அப்பொழுது இராமலிங்கம் யாரோ சில தொழிலாளர் அன்று காலை ஒரு கழுவப் பெண்ணை மானங்கெடுக்க முயன்றனரென் றும் ஆனதினல் அந்தத் தொழிலாளருக்கு ஏதும் பொருள்பண்டம் விற்கவொண்ணதென்றும் கதிராசிப்பிள்ளைக்குச் சொன்னார்; அப்படிச் சொன்னவுடனே இராமலிங்கத்தை அங்கே இருந்த தொழிலாளர் தாக்க இருபகுதயாருக்கு மிடையே சண்டையுண்டாயிற்று. ஈற்றில இராமலிங்கம் பயந்து அவ்விடம் விட்டு ஓடினர்.

சற்று நேரஞ் செல்ல, கூட்டமானதொழிலாளர்கள் பிககான்கள், இருப்புப்பாரை, பிக்கான் பிடிகள முதலியனவற்றைபுங் கொண்டு அங்கே வந்து தம்பையா எனபவர்வீட்டிற்கு நெருப்பு வைத்து விட்டார்கள்; (இந்தச் சமையத்தில குறித்த சாட்சி அப்படி நெருப்பு வைத்தவர்களை நீதபதிக்குச் சுட்டிக்காட்டினர்) பின்னர்ப பல வீடுகள் நெருப்புப் பற்றி யெரியக்கண்டேன்; என்னுடைய வீடும் கடையுட தீக்கிரையாயின; இதனல் எனக்கு நேர்ந்த நஷ்டம 2000 ரூபா வரையிலிருக்கும்"

சின்னவர் செல்லப்பா கூறிய சாட்சியம்:-

"என் வயசு 26. கமத்தொழில் செய்து வருகிறேன்; அதனோடு வசாவிளானில ஒரு தேநீர்க்கடையும் சில்லறைச் சாமான கடையும் வைத்து நடத்துகிறேன; வசாவிளான சந்தியில குறித்த தினத்தனறு மாலைநேரத்தில ஏழ்தா கலகம நடப்பதுபோற பெருஞ் சத்தம கேட்டது. உடனே என கடையைப் பூட்டிவிட்டுக் கடைவாசலில நின்றேன; அப்பொழுது இருபத்தைந்து முப்பது தொழிலாளர்கள கத்தி, பொல்லு முதலியவற்றோடு அதால வந்து என்னையடித்துவிட்டு என கடையிற் பூட்டை முறித்துக் கடையைத் திறந்தார்கள். ஆனல் என் வீட்டிலாக, கடையிலாக அவர்கள் நெருப்பு வைக்கவில்லை, கடையில் அவாகள் விளைத்தசேதம் 2500 ரூபா வரையிலிருக்கும்"

இலகுப்பிள்ளை செல்லப்பா சொன்ன சாட்சியம்:-

"வயசு 28 நானும் வசாவிளானிற் கடை வைத்திருக்கிறேன்; குறித்த தினத்தன்று மூன்று நாலு தொழிலாளர் பொல்லு, பிக்கான், அலவாங்கு, பிக்கான் பிடி யென்னுமிவைகளைக் கையிற் கொண்டவர்களாய் என் கடை இருக்கும் மார்க்கமாக வசாவிளான சந்தியை நோக்கி விரைந்து வந்தார்கள்; அப்படிவரும்போது அவர்களுள் இரண்டுமூன்று பேர் என் கடைக்குக் கல்லெறிந்தார்கள்; இன்னும் இரண்டுமூன்று பேர் என் கடையுட் புகுந்தார்கள்; அவர்களுள் ஒருவன் என் மனைவியின் இரவுக்கையைப் பிடித்திழுத்தான்; அவன் கத்தினன்; நான் ஒரு கொளுக்கிச் சத்தகத்தை யெடுத்து அவனமீதும் அவன் பக்கத்தே நின்றவர்கள்மீதும் மோதினேன். உடனே அவர்கள என மனைவியை விட்டுவிட்டு என் கடைக்கு நெருப்பு வைத்தார்கள்; கடை முழுவதும் சாம்பரானது! இதனல் எனக்கு நேர்ந்த நஷ்டம் நாலாயிரமபது ஐயாறு ரூபா வரையிலிருக்கும்"

நீதிபதி பின்னரும் மூன்று சாட்சிகளை விசாரணை செய்துவிட்டு இந்த அக்டோபர்மாசம் 5ந் தேதிக்கு விசாரணையைத் தவணையிட்டுள்ளார்.

### யப்பானியருடைய புதியவிமானம்

யப்பானியர் இப்பொழுது புதிய விமானத்தை ஆக்கியுள்ளார்களாம்; இது மிகவும் திண்மையுடையதாம்; இதனல அமெரிக்க விமானப்படைச் சேதம அதிகப்படுமெதாம்.

### "மொடர்ன்ரெவ்யூ" ஆசிரியர் மரணம்

#### திரு. இராமானந்த சட்டர்ஜி காலமானார்

கல்கத்தா செப் 30—

இந்தியாவிலேயே மிகப்பழைய மாதாந்தப் பத்திரிகைகளில ஒன்ருகிய மொடர்ன் ரெவ்யூ என்னும் ஆங்கிலப் பத்திரிகையின ஆசிரியரான திரு. இராமானந்த சட்டர்ஜி காலமானார்.

இந்தியாவின் அரசியல் கல்வி சமூகசேவை ஆகிய நடவடிக்கைகளில திரு. சட்டர்ஜி அதிகமாகப் பங்கெடுத்துக் கொண்டவர். இவர் இந்தியாவிலேயே மிகவும் வயதான பத்திரிகாசிரியரும் பிரசுரகர்த்தருமாவார். மரணமடையும் பொழுது இவருக்கு வயது 79.

## ருஷிய அரங்கத்தில் ஜர்மனியரின் எதிர்ப்பு அதிகரிக்கிறது

### எல்லாப் பகுதிகளிலும் பலத்த சண்டை

லண்டன் அக் 1

அல்ஜீயேர்ஸ் ரேடியோ ஒலிபரப்பிய இற்றைய வட ஆப்பிரிக்க நேசதேச ராணுவத் தலைமைக் காரியாலய அறிக்கை கூறுவதாவது:—

ஐந்தாவது சேனையின் போர் முனையில் படைகள் நல்ல முன்னேற்றமடைந்திருக்கின்றன. அவேலினே நகரம் கைப்பற்றப்பட்டிருக்கிறது. நமது துருப்புகள் கஷ்டமான பிரதேசத்தில் நேப்பிள்ஸை நோக்கித் தொடர்ந்து முன்னேறுகின்றன. அங்கு ஜெர்மானியரின் காசவேலை முழு மூச்சாக நடைபெறுகிறது. எட்டாவது சேனையின் முன்னேற்றம் திட்டப்படி நடைபெறுகிறது.

டோர் அனவுன்ஸியாடா நகர் நேசப் படைகளால் கைப்பற்றப்பட்டுவிட்டதாக கெய்ரோ ரேடியோ அறிவிக்கிறது.

அவெலினோ நகரம் வீழ்ச்சியடைந்ததால் வொல்டர்னோநதி ஆற்றுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. கெஸெல்ரிங்கின் படைகள் இந்த ஆற்றை நோக்கித்தான் பின்வாங்குவதாகநம்பப்படுகிறது. இந்த ஆறு னொருங்கிலை ரோமாபுரிக்கும் குறித்த நதிக்குமிடையில் ஒரு சில தற்காப்புத் தளங்கள் மட்டும் இருக்கின்றன. பெனெவென்டோவுக்குத் தெற்கில் 20 மைல் தூரத்தில அவெலினோ நகரம் இருக்கிறது.

### நேப்பிள்ஸ் சமவெளியில் யுத்தவேகம் அதிகரிப்பு

5 வது சேனையுடனிருக்கும் ராய்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது: நேப்பிள்ஸ் சமவெளியில யுத்த வேகம் தீவிரமாகியிருக்கிறது. பிரிட்டிஷ் டாங்கிகளும காலாட்படையும் ஜெர்மானியரைத் தேக்க முயலுகின்றன. நேற்று இரவுக்கெல்லாம் நவீன பாம்பேயை நகரிலிருந்து சத்துரு துருப்புகள் அடியோடு துரத்தப்பட்டுவிட்டன. ஆனல் நவீன பாம்பியை நகருக்கும பழைய பாம்பியை நகருக்குமிடையில் சத்துரு இன்னும் சிறிது பலத்துடனிருந்து வருகிறான். இப்பகுதிக்கேற்றுப் பிற்பகல் ஏராளமான சிறந்த படைப்பிரிவுகளும் தளவாடங்களும் கொணர்ந்து குவிக்கப்பட்டிருக்கின்றன. வழியில் பிரிட்டிஷ் துருப்புகளுக்கு கிராமமக்களிடையே அமோகமான வரவேற்பு இருந்துவருகிறது. கிராம மக்கள் நமது துருப்புகளை முத்தமிட்டுக்கொண்டு சந்தோஷ மிகுதியால் கரகோஷமும் செய்கின்றனர். இன்னும் அவர்கள் பூக்களையும பழங்களையும நமது துருப்புகள்மீது வாரி இறைக்கின்றனர். குழந்தைகளும் ரோட்டு ஓரமாக எரிந்து கிடக்கும லொரிகளின் முகட்டில ஏறிக்கொண்டு, அவ்வழியே செல்லும நமது துருப்பினரைக் கண்டு குதூகல ஆரவாரம் செய்கின்றனர். கைப்பற்றப்பட்டும் நகர்களில் பிரிட்டிஷ் துருப்புகளுக்குத் தக்க முறையில் நகர அதிகாரிகளால வரவேற்பு அளிக்கப்படுகிறது. தற்சமயம் ஜெர்மானியர் வடக்கு நோக்கிப் பெருவாரியான முறையில பின்வாங்கி வருகின்றனர். அப்பாதையில் சத்துருவின் ஆயுதக் கிடங்குகள் வெற்றிகரமாகத் தாக்கப்பட்டுவருவதாக நேற்று முன்னணிக் காவற்கூடங்களிலிருந்து கிட்டிய தகவல்கள் கூறின. ஸார்னோ கெஸ்சேரா நகர்களுக்கு மத்தியில் இன்னும் ஓரளவு ஜெர்மானியர் இருந்துவருகின்றனர். ஆனல் தற்போதுள்ள நிலைமையின்படி, இவ்விரு பகுதிகளிலுமுள்ள சத்துரு துருப்புகள் பொறியில் சிக்கிக்கொண்டதாகக் கூறலாம்.

### ருஷியாவில் ஜெர்மன் எதிர்ப்பு வலுக்கிறது

மொஸ்கோவிலிருந்து ராய்ட்டர் காரியாலய நிருபர் அறிவிப்பதாவது:—

ஜெர்மன் எதிர்ப்பு வலுக்கிறது. இலையுதிர்கால மழையினல ரஸ்தாக்கள் சேறு நிறைந்திருக்கின்றன. ஜெர்மானியர் இக்காலத்தை அனுகூலப்படுத்திக்கொண்டு சோவியத் முன்னேற்ற வேகத்தைக் குறைப்பதற்காகத் தாம் திரட்டி வைத்திருந்த ரிசேர்வ் டாங்கிகளையும காலாட்படையையும் ஏவி விடுகின்றனர்.

இதனல் சோவியத் தாக்குதல் எவ்விதம பாதிக்கப்படுமென்பது இனிமேல்தான் தெரியும். ஆனல் வெள்ளை ருஷ்யாவின் மத்தியையும் அதற்கு அப்பாலுள்ள ஜெர்மன் ஆக்கிரமிப்புக்குட்பட்ட விசாலமான பிரதேசத்தையும் பாதுகாக்கும் புதிய ஜெர்மன் பாதுகாப்பு அணியிலுள்ள விட்டெப்ஸ்க், மொகிலெவ், ஓர்ஷா, கோமெல என்னும் நான்கு கோட்டைகளையும காப்பாற்ற ஜெர்மன் இராணுவ பீடம் பெருமுயற்சி செய்கிறதென்பதில் சந்தேகமில்லை.

வெள்ளை ருஷ்யா போர்முனையில் நிலைமை சத்துருவுக்கு அனுகூலமற்றதாகவே இருந்துவருகிறது. சோவியத் துருப்புகள் ஓர்ஷாவுக்கு வடகிழக்கே பத்துமைலுக்குக் குறைந்த தூரத்தில் டப்ரோவ்கா என்னுமிடத்திலிருக்கின்றன. அவை மொகிலேவை நோக்கித் தாக்கிக்கொண்டு முன்னேறுகின்றன. ருஷ்யருக்கும் மொகிலேவுக்குமிடையில் ஆக 25 மைல தூரமிருக்கிறது.

மேலும் வடக்கில் இதர ருஷ்யப் படைகள் விட்டெப்ஸ்கிலிருந்து 30 மைலுக்குக் குறைந்த தூரத்திலிருக்கின்றன. தெற்கில் ருஷ்யர் கோமெல் நகரின் வாயில்களைத் தாக்குகின்றனர். எல்லாப் பகுதிகளிலும் யுத்தம் பலமாகியிருக்கிறது.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
புரட்டாதி௴ கஅஉ திங்கட்கிழமை

## வங்க நாட்டுக்கு வந்த கதி

நிலவளம் நீர்வளங்களாற் சிறந்ததென்றும், ஒருகாலத்திலே தேனும் பாலாறும் பாய்ந்ததென்றும் புராணேதிகாசங்களிலும் தேசசரித்திரத்திலும் பாராட்டப்பட்ட வங்காளம் எனப்படும் வங்கநாட்டிற்கு இப்பொழுது நேர்ந்த கதியைக் கேள்விப்பட நெஞ்சந் திடுக்கிடுகின்றது; வங்கநாட்டிலே இப்பொழுது நேர்ந்துள்ள பஞ்சம் முன் எக்காலத்திலும் இல்லாததாம்; சமாசாரப் பத்திரிகைகளைப் பார்க்கும்போது வங்கநாட்டில் நேர்ந்த பஞ்சம் வர வர அதிகப்படுகின்றதே யொழியக் குறைந்தபாடில்லை யென்பது தெற்றெனப் புலப்படுகின்றது; அந்நாட்டின் பஞ்சத்தைப்பற்றிக் கீழ்வருஞ்செய்திகள் கன்னெஞ்சுடையாரையும் உருகச்செய்யும் இயல்பின:—

"கல்கத்தா நகரிலும் ஏனைய பட்டினங்களிலும் நாட்டுப்புறத்துள்ள கிராமங்களிலும் நாடோறும் பன்னூற்றுக் கணக்கான ஆண்கள் பெண்கள் சிறுவர் சிறுமியர் முதியோர் பசியால் அவசமுற்றுக் கிடக்கக் காணப்படுகின்றனர்; பல பிரேதங்கள் காணப்படுகின்றன; கணவர் தத்தம் மனைவியரைத் தாபரிக்கமுடியாமல் வீட்டைவிட்டுத் தூரதராயினர்; மனைவியர் பட்டினியால் வருந்தி எழுந்து சஞ்சரிக்கமுடியாத புருஷரைவிட்டகன்றனர். மக்கள் வயசின முதிர்ந்த நோய்வாய்ப்பட்டும் பஞ்சத்தின்வாய்ப்பட்டும் வருந்தும் பெற்றோரைக் கைவிட்டகன்றனர்; தமையன்மார் தம்பிமார் தங்கள் கைம்மையான சகோதரிமார் வந்து தம்மை நோக்கவும் கேட்டுங் கேளார்போல் இருக்கிறார்கள்." இன்னும் இப்படியான பல பரிதாபநிலை பத்திரிகைகளில் வங்கநாட்டு மக்கள் படும்பாட்டையிட்டு எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன; உணவுப் பஞ்சம் வந்த காலத்தில் மனுஷனுடைய நாகரிகம் அவனுக்கு எவ்வாறாகுனுந் துணையாமோ என்ற ஆசங்கையும் நிகழுகின்றது. இவைகளையெல்லாம் இங்கே எடுத்து விரித்துச் சொல்வதனால் மனத்துயர் அதிகப்படுமே யொழிய வேறு யாதும் பயனில்லையாம்.

அரசினர் இக்கொடிய பஞ்சத்தை நீக்குதற்கு இயன்ற வரையில் முயற்சிகளெல்லாஞ் செய்கிறார்களாம். இந்தச் சமயத்தில் இந்திய மந்திரியாகிய மிஸ்றர் அமெரி யென்பவர் வங்கத்திற் பஞ்சம் நேர்ந்ததற்குச் சொல்லுங் ஞாயம் இந்திய மக்களுக்குப் பெரும் ஆத்திரத்தை விளைக்கின்றதாம். அந்த மந்திரியின் கூற்று ஒருவனுக்கு "நகச்சுற்றில் உலக்கை விழுந்த விதமாக" பஞ்சத்தால் வருந்தும் இந்திய மக்களின் உள்ளத்தைப் பெரிதும் உபாதிக்கின்றதாம். பிருத்தானிய பத்திரிகைகள் பல வங்காளத்தில் நேர்ந்த பஞ்சத்தினால் அந்நாட்டு மக்கள் படுங் கஷ்டத்தையிட்டுப் பெரிதும் அநுதாபப்படுகின்றனவாம். அநுதாபப்பட்டு ஆவதென்ன? "அப்பா" என்றால் உச்சி குளிருமா? பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்ற வாக்கு வங்கநாட்டு மக்களிடத்திலே இப்பொழுதே பிரத்தியட்சமாகக் காணப்படுகின்றது. அரசினர் பஞ்சத்தை நீக்குவதற்கு எவ்வகையான முயற்சிகளைச் செய்தாலும் பஞ்சம் விரைவில் நீங்குந்தன்மையைக் காணவில்லையாம்.

இனி, இந்திய அரசினருக்கும் இந்திய மக்களுக்குமிடையே பரஸ்பரம் உள்ளவிசுவாசமும் ஒற்றுமையும் உலகமறிந்தவை; இதனால் இப்பஞ்ச நீக்க முயற்சிகளில் அரசினரோடு பிரசைகளும் பிரசைகளோடு அரசினரும் ஒத்துழைக்கின்றிலராம். இவ்விருபகுதியாரும் இப்படி வேற்றுமைப்பட்டுப் பிணங்கிக் கொண்டிருப்பதற்கிடையிற் பஞ்சமானது தன் கருமத்தை முடித்துவிடுமோ என அஞ்சக்கிடக்கின்றது. அரசினரும் ஊரவர்களும் ஒற்றுமைப்பட முடியாவிட்டாலும் இருபகுதியாரும் தனித்தனி பஞ்சத்தை நீக்க முயற்சி செய்வரேற் பஞ்சம் ஒருவாறு நீங்குமே! செல்வத்தாற் சீர் சிறப்பால மேம்பட்ட வங்கநாட்டிற்கு இந்தக்கதி நேர்ந்ததென்றால் இவைகள் குறைந்த ஏனைய நாடுகளுக்கு என்ன கதி நேருமோ யார் அறிவார்? தெய்வமொன்றே யறியும். வங்கநாட்டு மக்கள் இப்படிப் பஞ்சத்தால் மாணடொழியும் பழி யாரைச் சூழுமோ யாமறியேம்!

## நவராத்திரியில் தேவியை வழிபடுக

"பிடியிட்ட வாழ்க்கையால் உப்பிட்ட
கலமெனவும்
மெய்யெலாம் உள்ளுடைந்து
வீதிட்ட செல்வர்தந் தலைவாயில்
வாசமாய் வேதனைக ளுமவேதனும்
குடியிட்ட வெவ்வினையை யேவினுன்
பாவிநான் தொடரிட்ட தொழில்க
ளெல்லாந்
துண்டிட்ட சாண்குழி யின்பொருட்
டாயதுன் தொண்டர்பணி
செய்வதென்றே!
அடியிட்ட செந்தமிழி னருமை
யிட்டாருரில் அரிவையோர்
பாலைவாயில்
அம்மட்டு மடியிட்டு நடை நடந்தருளடிக
ளடியிது முடியிதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங்
கிள்ளையே!வளமருவுதேவையரசே!
வளைராசனுக் கிருகண் மணியா
யுதித்த மலை
வளர்காதலிப் பெண்ணுமையே"

நவசக்திகட்கும் பராசக்தியாயுள்ள தாயே! இந்த நவராத்திரி காலத்திலே உனது திருவருட் பெருக்கானது எழுகடற் பெருக்கைக் காட்டிலும் அதிகமாகப் பாவிப் பெருகுமென்று பெரியோர் சாதிப்பர். இந்தப் புண்ணிய தினங்களிலே உன்னைப் புத்திபூர்வமாக வணங்குவாரையும் அபுத்தி பூர்வமாக வழிபடநேர்வாரையும் உன் திருவருள் வெள்ளம் தன்னிடத்திலே திளைக்கச் செய்யுமன்றோ! வெள்ளம் பெருகிவரும்போது அதன்கண் ஸ்நானஞ் செய்யச் சென்றவர்களையும் நனைக்கும்; அந்த நோக்கமின்றி இவ்வெள்ளப் பெருக்கில் அகப்பட்டவரையும் நனைத்துவிடுமென்பது நிசந்தானே! அதுபோன்றதன்றோ, தாயே! உன் திருவருட் பெருக்கம்.

சகல உலகங்களையும் அவ்வுலகங்களிலுள்ள ஆன்ம கோடிகளையும் பெருமற் பெற்றருளிய நித்திய கன்னிகையே! சிலவருடங்களாக உன் மக்கள் படும்பாட்டையும் கெடுங் கேட்டையும் நீ இன்னமுந் திருவுளத்திற் கொள்ளவில்லையா? உன் பிள்ளைகள் இடும் ஓலம் உனது திருச்செவிகளில் ஏறவில்லையா? எல்லா நிகழ்ச்சிகளையும் எவருஞ் சொல்லாதறியும் அன்னையாகிய நீ உனது உத்தம மக்களுட் சிலரினுஞ் சிலர் தங்கள் குறைகளை, உனக்கு ஒருமுறையல்ல, இருமுறையல்ல, மும்முறையல்ல, பன்முறை முறையிட்டாலும், கேளார்போற், பராமுகஞ் செய்கிறாயாமே! நீ பெற்றுள்ள மக்களுட் பலர் உன்னை மறந்து தாயாகிய உன்சொற்றுறந்து, நாத்திகம் பேசி, அடாதன செய்தாலும், சகல உலகுயிர்க்குந் தாயாகிய நீ அவர்கள் செய்யும் அபராதங்களைப் பொறுத்து அவர்களுக்கு ஆதரஞ் செய்வதை விடுத்துப் புறக்கணித்தல் நியாயமா? "பொல்லாத சேயெனில் தாய்தள்ள நீதியோ! புகலிடம் பிறிதுமுண்டோ? உலக மாதாவே! இந்த நியாயம் நீ அறியாததா? பிள்ளையைப் பிதா வெறுத்தாலும் பெற்றவள் வெறுக்கமாட்டாளென்று உலகத்திலே சொல்லுவார்களே! தாய்ப்பூனையானது தன் குட்டிகள் பராமுகமாக இருப்பவும், தானாக அக்குட்டிகளிருக்குமிடந்தேடி வந்து அவைகளைத் தனவாயாற் கௌவித் தூக்கிக் கொண்டு போய்ப் பாதுகாப்பான இடத்தில் வைத்துக்காத்து வளர்ப்பதுபோல், மாதாவே, நீயாகத் தேடி வந்தன்றோ உன் துஷ்டப் பிள்ளைகளை ஆசரித்தணைத்தல் வேண்டும்; சிறுமானேந்தும் பெருமான் பாகத்தி லெழுந்தருளியிருக்கு மமையாளும் உமையாளே! உன் மக்களாயுள்ள நாங்கள் எங்கள் விபரீத புத்தியினால் உன்னை மறந்து உனைப் பூசியாதொழிந்தமை நிசம்! அப்படிப்பட்ட எங்களுக்கு இப்பொழுது அறக்கருணை செய்தலை விடுத்து மறக்கருணை செய்கின்றுயா? நீ அப்படிச் செய்வதும் நாங்கள் இப்படிப் படுவதும் முறைதான்; ஆனால், எமலமையெல்லாமீன்ற அம்மையே! நீ இப்பொழுது செய்யும் மறக்கருணை ஆற்றலாது! ஆற்றலரிது!

தாயே! உமையம்மையாரென்னுந் திருநாமத்துடன் உலகோர்க்கு ஞானத்தை அருள்பவளும் நீ. இலக்குமி சரசுவதி யென்னுந் திருநாமங்கள் பூண்டு முறையே அநுகு பொருட்செல்வ மென்னும் மிரணடையும் கல்விச் செல்வத்தையும் உதவுபவளும் நீயே; துர்க்கை காளி சாமுண்டி யென்னுந் திருநாமங்களுடன் பொலிந்து ஆண்மை ஆற்றல் வெற்றி யெனனும்வைகளை ஈந்தருளுபவளும் நீ. ஆனால், உன்னைக் காளியென்னுந் திருநாமத்துடன் பூர்வந்தொட்டு வழங்கிவருஞ் சாதியார் இருப்பதாலும், உனதுசிறந்த புராதன திருக்கோயில் அங்கே விளங்குவதனாலும் காளிகோட்டம் எனப்படும் கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்ட வங்காளத்திலுள்ள மக்களனைவரையும் பஞ்சத்தால் வருந்தவும் வருந்தியிறக்கவும் வைத்துவிட்டு வேடிக்கை பார்க்கின்றாயாமே! இது மெய்தானா? "பிள்ளைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குப் பிராணன் போகிறது" என்ற விதமாக அங்குள்ள மக்கள் அத்தனை பேரும் பஞ்சப்பட பலர் மாண்டொழிய நீ வேடிக்கை பார்க்கிறாய், ஆனால் எங்கள் அருமையான பிருத்தானியரின் விசுவாசமுள்ள பிரசைகள் காளித் தொகையிற் குறைந்துகொண்டு போகிறார்களே யென்பதே, நீ, ஏன்? அம்மா! சிந்திக்கில்லை; அந்த வங்க மக்களையெல்லாங் காக்க வேண்டிய நீ, காவாதொழிய, அவர்களெல்லாரும் அகர்த்தமுற, நாளைக்கு, இந்திய மந்திரியாகிய மிஸ்றர் அமெரியும், பிரதான மந்திரியாகிய மிஸ்றர். சேர்ச்சிலும், உன்னைப்பார்த்து "ஏ காளி, நீ ஏன், எங்கள்பிரசைகளைக் காவாது விட்டாய் என்று உன்னைக்கேட்டால், தாயே! நீ அவர்களுக்கு என்ன சமாதானஞ் சொல்லப் போகிறாய்! "வேந்தன் சீறின் ஆந்துணையில்லை" யென்பது, அன்னையே, நீ அறியாத வாக்கியமல்ல. அம்மா! நான் சிறுபிள்ளை, நீ பெரிய தாய், இன்னவின் மேலீட்டினால் இன்னுத சொன்னேனுயினும் பொறுத்தருளுதி; "நீயே துணையென்று காளிநம்பிதன் எனை நீ மறந்தால் தாயே எனக்கொரு தஞ்சமுண்டோ சங்குசக்கரத்தாய்" என்று உன்னடியவன் பாடிய பாட்டையேநானும்பாடிக்கொண்டு நீசெய்வதைக் கண்டுகொள்வதுதான் நான் செய்யத்தக்கது.

## மகாநவமி சங்கீத மகோத்சவம்

வட்டுக்கோட்டைச் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில், மேற்படியூர்ச் சங்கீத கழகத்தாரால் நிகழும் புரட்டாதி௴ 19ந் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 21ந் உ வியாழக்கிழமை வரை ஷ௸ உத்சவம் மேற்படி வித்தியாசாலைச் சொந்தக்காரர் உயர்திரு. K. நாகலிங்கம் அவர்களின் ஆதரவில் நடைபெறுமெனக் குறித்த கழகக் காரியதரிசி தெரிவிக்கின்றார்.

## நம் கோயில்களும் கும்பிடுவோரும்

சிவநேயச் செல்வர்காள்!

என்னே நம்சிவநேயம்! எங்கே நம் சிவதொண்டு! எல்லாம் கெட்டு இந்நிலைக்கு வந்துவிட்டோம். கடையியாகப் பணமுள்ளவர்சரி, பணமில்லாதவர்சரி, கமம புலம் உள்ளவர் சரி, இல்லாதவர்சரி ஒரு அளவுக்குமேல் சாப்பிடக்கூடாது என்ற கட்டுப்பாடும் வந்துவிட்டதே! ஐயையோ! நமக்கு இன்னும் அறிவில்லையே! ஒன்றாயிருந்த குடும்பம் சிதறுண்டு புருஷன் சிங்கப்பூரிலும் மனைவி இங்கும் அல்லது பிள்ளைகள் அங்கும் பெற்றோர் இங்குமாக ஒருபகுதியின் சுகம் மற்றதைப் பகுதிக்குத் தெரியாமல இருக்கும் காலம் வந்தும் இது ஏன் இப்படி நமக்கு நேருவானேன்? நம் முன்னோர்கள் சுகமாய் வாழவில்லையா! இதற்கெல்லாங்காரணம் நம்முள் கோயில் கும்பிடப்போவோர் குறைத்தும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# பண்டைத் தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

(முன்றொடர்)

## மரஞ்செடிகளைத் தொழுதல்

பண்டைத்தமிழர் மிருகவணக்கமேயன்றி மரஞ்செடி முதலியவற்றைத் தொழுததாகவும் எண்ணஞ் செய்யப்படுகின்றனர். வில்வம் முதலிய மரங்களையும் துளசி முதலிய செடிகளையும் அவர்கள் வணங்கியதாகக் கூறப்படுகின்றது. தமிழர் சில மிருகங்களைப் பரிவுடன் நடாத்தியதேபோல் சில தாவரங்களிடத்தும் அங்ஙனம் நடந்துகொண்டது உண்மையேயாம். அவர்கள் இயற்கைப் பொருள்களாகிய சூரியன், சந்திரன், மலை, நதி முதலியவற்றையும் வணங்கியதாகத் தெரியக்கிடக்கின்றது. அவர்கள் இப்பொருள்களையெல்லாம் கடவுளாக மதித்து வணங்கியவரல்லர். அப்பொருள்களிடத்து வியாபித்துள்ள கடவுளையே அவற்றின் மூலமாக வணங்கினர். மிருகங்களிடத்துள்ள பயத்தினால் அவற்றை வணங்கலாயினர் என்னும் ஆராய்ச்சியாளர் கூற்று தாவர வணக்கத்திற்கு ஏலாது. அவர்கள் மிருகங்களையன்றித் தாவரவர்க்கங்களாகிய மரஞ்செடிகளையும் இயற்கைப்பொருள்களையும் ஒக்க வணங்கினமை ஆராய்ச்சியாளரின் கூற்றை நிராகரிக்கின்றது. மிருகங்களிடத்துள்ள பயத்தினால் அவற்றை வணங்கலாயினர் என்னும் கொள்கை, தாவர வணக்கத்திற்குச் செல்லாது ஆதலால் அவர்கள் வணக்கத்தின் மூலகாரணம் இன்னதென ஆராய்ந்து தெளிய வேண்டும். பண்டைத்தமிழர்கள் அனுசரித்த தெய்வவழிபாட்டின் பல முறைகளை ஞானமாக சமய அறிவுகொண்டு ஆராய்ந்தால் அவர்கள் கடவுளின் அருட்சத்தியைப் பலவிதமாக உணர்ந்திருந்தனரென்பதும் அதனுற்றான் அச்சத்தியைப் பல பொருள்களிற்கண்டு வணங்கினரென்பதும் புலப்படும். கடவுளின் அருட்சத்தி மனிதனிடத்தில் மாத்திரம் விளங்குவதன்று. மிருகங்கள், தாவரங்கள், ஏனைய இயற்கைப்பொருள்கள் முதலியவற்றினும் விளங்கக் காணலாம். கடவுளின் அருட்சத்தி மனிதனிடத்து விளங்குவதுபோல ஏனைய சிருஷ்டிப் பொருள்களில் விளக்கமுறுமை உண்மையே. மனிதனுடைய அறிவு முதலியவற்றை மேலாகும் போலும்; ஆனால் மனிதனுடைய அறிவுக்கேற்ப அவனுக்குத் 'தான்' என்னும் அகங்காரம் அல்லது ஆணவமல மூளைப்பு உண்டு. அகங்காரத்தால் அவனுக்குக் கடவுளின் அருட்சத்தி துலங்குவதில்லை. யான் எனது என்னுஞ் செருக்கை விட்டு மேல்நிலைக்கு வந்தபோதே அவனிடத்து அருட்சத்தி பிரகாசிக்கும். அகங்காரமும் கடவுளின் அருட்சத்தியாற் பிரேரிக்கப்பட்டதாகும். தாமத குணத்தின் மூலமாக மறைந்துபோய சாத்துவ குணத்தின் மூலமாக வெளிப்பட்டும் அருட்சத்தி பிரகாசிக்கின்றது. வெளிப்பட்டு நிற்கும்போதுதான் நாம் அதனைக் கண்டு களிப்பது. ஆகையால் குணத்தைப் பொறுத்ததாகும் அவற்றின் தன்மை. இதனுற்றான் மனிதனுக்கும், மிருகத்திற்கும், தாவரத்திற்கும் ஏற்பட்டுள்ள வித்தியாசம். மிருகங்களிடத்தும், தாவரங்களிடத்தும் தாமத குணம் மனிதனிடத்துள்ளதைப் பார்க்கினும் அதிகமாக இருப்பினும் அவைகளிடத்து அக்குணம் மங்கிக்கிடக்கின்றது. மனிதனிடத்தோ அக்குணம் சிறப்புற விளங்குகின்றது. சிறந்ததான சிருஷ்டிப் பொருள்களில் சாத்துவகுணம் சிறப்புற விளங்காமையால், அப்பொருள்களில் ஓரோவிடத்துச் சாத்துவ விளக்கங் காணப்படின் அப்பொருள்களில் கடவுளின் அருட்சத்திப் பிரகாசம் காணப்படுகின்றதென்னும் எண்ணத்தால் அப்பொருள்கள் போற்றப்படுவதாம். நமது சென்னை வெண்ணெனின் எங்கெங்கே நன்மை விளங்கின்றதோ அங்கெல்லாம் கடவுளை வணங்கவேண்டுமென்பதாம். அப்பொருள்களை மூலமாக அவருடைய அருட்பெருக்கத்தில் நாம் திளைக்கின்றோம். மனிதன் மரத்தையுஞ் செடியையும் கடவுளாக வணங்கினனென்பது அவனுடைய அறிவுக்கு ஏற்புடைத்தன்று. உருவங்கள் மூலமாகக் கடவுளைத் தொழுவதுபோல அவன் கடவுளை மரங்களிலும் செடிகளிலும் தொழுதான் என்பதே உண்மையாகும். இச்சாதனம் மூலமாக மனிதன் கடவுளின் சொரூபத்தை அறிய முயல்கின்றான். கடவுளின் அருட்சத்தி நிரம்பப்பெற்ற பொருள்கள் ஏனையவற்றைக் காட்டிலும் அவனை வசீகரிப்பதால் அவன் அவற்றைப் போற்றுகின்றான்.

கடவுள் உண்மையைப்பற்றி நம்மவர் மிகச் சிரத்தையுடையவர். ஏனைய மதத்தினர்போல அவரது தன்மையை நுணுகி ஆராயாதவரல்லர். நம்மவர் கடவுளின் வியாபகத் தன்மையை நன்கறிந்தமையால் கடவுளின் அருட்சத்தி துலங்கும் பொருள்களிலெல்லாம் அவனைப் போற்றி வணங்குகின்றனர். ஒவ்வொரு சடப்பொருளிலும் மறைந்து கிடக்கும் சித்துணர்ச்சியையும் நமது மூதாதைகள் நன்கு அறிந்து வைத்திருந்தனர். அப்படி அவர்கள் அறிந்து வைத்தமையே நமது சித்தாந்தத்தின் ஏற்றத்துக்குக் காரணமாகும்.

வில்வ மரத்திற் சாத்விக குணம் சிறந்து விளங்குகின்றது. மருந்துக்கு உபயோகப்படுவதினால் இவ்வுண்மை நன்கு தெளியப்படும். வில்வமரமும் மேன்மை பொருந்தியதென்று சமயநூல்கள் கூறும். வில்வ இலையின் மூன்று பிரிவுகள் சிவபெருமானது இச்சா, ஞான கிரியா சக்திகளின் அறிகுறியாகும். வில்வ இலையை சிவ பத்திரம் என்று புஷ்பவிதி கூறும். பூசா கிரியைகளுக்கு வில்வ பத்திரம் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. சித்துணர்ச்சியைக் கிளப்புவதற்குப் பூசைக்கு ஏற்பட்டுள்ளது. அப்பூசைக்கு வேண்டிய உபகரணங்கள் சாத்விக குணத்தை அதிகமாகக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். உலக அறிவு ஒன்றேயுடையவர் சித்துணர்ச்சியைப்பெற்று அதன் பயனை அடைய விரும்பும் நம்மவர்களை ஏழைகளென்று மதியாரென்பது திண்ணம். ஒரு மூலிகையின் குணத்தை வைத்தியன் நன்கறிவான். சாமானிய மனிதன் அதன் மேன்மையைச் சற்றும் அறியான். நம்மவன் ஒருவன் அரசமரமும் வேப்பமரமும் மருங்கியிருக்கக் கண்டால் சிவத்துவமும் சத்தித்துவமாக அவற்றைப் பாவித்து வழிபடுகின்றான். அம்மரங்களில் மறைந்துகிடக்கும் சித்தாற்றல் அவற்றின் மருத்துவ குணத்தாற் புலப்படும். துளசியின் மகிமையும் இத்தன்மைத்தே. முற்காலத்தில் விளங்கிய முனிவர்கள் மூலிகைகளின் குணங்களை நன்கறிந்துள்ளனர். அதனுலேதான் அவர்கள் அவைகளைப் போற்றியது. காலாந்தரத்தில்மேனாட்டிசனங்கள் தமது அறியாமையால் சாத்விக குணங்களை சிந்திப்பிலாத மரஞ்செடிகளையும் வணங்கலாயினர். இதனுற் சமயத்திற்கு யாதொரு குறையுமில்லையாம்.

(தொடரும்)

# ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள்

1

(வெள்ளவத்தை மு. இராமலிங்கம் எழுதுவது)

### வேடியரசன் நாடகம்

இந்த யாழ்ப்பாணம், நவாலியூர் வைரவி இராமு என்பவரால் இயற்றப்பெற்றது. இவர் முற்குக வமிசத்தைச் சேர்ந்தவர். இவர் வசித்த காலம் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியும் எனலாம். இந்நாடகம் இயற்றி அரங்கேற்றப் பெற்ற காலம் 1844ம் ஆண்டளவிலென இந்நூலின் முகவுரையிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்நாடக ஆசிரியரைப்பற்றி வேறொரு விபரமும் தெரியவில்லை. இவரின் சீவிய சரித்திரமறிந்தவர்கள் இப்பத்திரிகை மூலம் தெரியப்படுத்துதல் நலம்.

இந்நாடகம் முதன்முதல் நவாலியூரிலேயே 1844ம் ஆண்டளவில் அரங்கேற்றப்பெற்றது. இந்நாடகாசிரியரால் பிறிதோர் நாடகமும் இயற்றப்பெற்றதாம். அது செல்லுக்கிரையாய்ப் போயிற்று. இந்நாடகம் நவாலியூர் மு. அப்பாத்துரைப்பிள்ளையவர்களால் திருத்தியும் புதுக்கியும் பார்வையிடப்பெற்றும் மானிப்பாய் நிவாசரும் சங்கீத வித்துவானுமாகிய திரு. விநாசித்தம்பிப்பிள்ளையவர்களால் தருக்கள் நாடகமெட்டுக் கிசைவான இராக தாளங் கட்டப்பெற்றும் 1894ம் ஆண்டு மயிலிட்டி வச்சிரயந்திர சாலையில் அச்சுவாகனமேற்றப்பெற்றது. இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளின்முன் இந்நாடகம் வட்டுக்கோட்டையில் கடைசியாக நடிக்கப்பெற்றபோது நாம் நேரிற் கண்டு களித்தோம். கிடைத்தற்கரிய இந்நாடகநூற் பிரதியொன்றினை எமக்கு இரவலாகக் கொடுத்துதவிய தெஹிவலை (Dehiwala) நண்பர் திரு. சோம சரவணபவன் அவர்களுக்கு எம் நன்றி உரித்தாகுக.

### களையோடைக் கண்ணகையம்மன் ஆலயம்

இந்நாடகப் பிரதியைத் திறந்ததும் அங்கிருக்கும் கண்ணகை துதி எவர்கண்களையும் கவராதுபோகாது. அதனை இதன்கீழ்த் தருவாம்.

தழைகூடியகிழ்ந்த மலர்த்தே னூறேடச்
சங்குதவழ் பண்களெல்லாந் தழைக் குஞ்சாலி
கிளைகூடிக் கயல்மலங்கு தாழை பாளை
காய்கீறும் வாளை மிகக்கிளர்ந்து பாய்ந்தே
சுளைசூழும் வருக்கைகளின் பழங்கள் சிந்துஞ்
சுளைசூழும் நவாலிதனிற் றுய்கமான
களையோடைப் பதியி லனுதினமும் வாழுங்
கண்ணகையி னிருசரணங் காப்ப தாமே.

இக்கவியிற் கூறப்பட்டிருக்கும் களையோடைக் கண்ணகையம்மன் கோயிலைப்பற்றிப் பிறிதொரு யாழ்ப்பாணப் புலவரும் பாடியிருக்கிறார். அப்பாட்டையொட்டிய ருசிகரமான சம்பவமொன்றைப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் வெகு அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார். மேற்கூறிய கோயிலிலே வட்டுக்கோட்டை மு. சுவாமிநாதபுலவர் கந்தபுராண படனத்திற்குப் போயிருந்தபோது அங்குள்ள பற்றைக்குச்சமீபத்தில் கீரியும் பாம்பும் ஒன்றுகூடி விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டு பின்வருங் கவியைப் பாடினராம்:—

மலியா னவமலி மாய்கையை நீக்கி மலர்ப்பதத்தைத்
துளியாதரவொடு தோத்திரஞ் செய்யச் சுகந்தருவாய்
எலியாடரவொடு கீரியொன்றாகி விளிதிசைந்து
கலியாணமாயுறையுங் களையோடையிற் கண்ணகையே.

### வேடியரசனின் பூர்வவரலாறு

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஒருமுறை பாற்கடலிற் பள்ளிகொண்டுவிட்டு எழுந்து வரும்போது தமது வலம்புரிச் சங்கை எடுத்துவர மறந்துவிட்டார். ஆகவே அந்தணன் ஒருவனை அழைத்து வலம்புரிச் சங்கை எடுத்துவரும்படி அனுப்பினர். அவன் சென்று வெகுநேரமாகியும் வாராததால் தமது வலத்துடையிற் றட்டினர். பிள்ளையொன்றுதித்தது. அவனையனுப்பினர். அவன் உடனே வலம்புரிச் சங்கைக் கொணர்ந்து அவர்முன்பு வைத்தான். அப்பிள்ளைக்குக் குகன் என்னும் நாமத்தையும் வேடியரசன் என்னும் பட்டத்தையும் கருடக்கொடியையும் நீலகேசியென்னும் பெண்ணையும் கொடுத்து அவனுக்குச் சகோதரர்கள் நால்வரையுஞ் சிருஷ்டித்து நாக நகரை அரசாளும்படி வைத்தனர்.

### கதைச் சுருக்கம்

சோழவரசன் கொலுவிலிருக்கிறான். கண்ணகைக்கும் கோவலனுக்கும் திருக்கலியாணஞ் செய்யவெண்ணியோர் பாதச்சிலம்பு செய்வதற்காய் நாகரத்தினம் தேடிவந்தோமென மாநாகர் மாசாத்தர் என்னுமிரு செட்டிகள் வந்து கூறுகின்றனர். செட்டிகள் தேடிவந்த நாகரத்தினம் தன்னிடமில்லையென்றும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினுடைய வலத்துடையிற் பிறந்தவனுகிய வேடியரசனிடம் உண்டென்றும் தனது சேனாபதி மீகாமனையனுப்பி நாகரத்தினம் வாங்கிக் கொடுக்கிறேன் என்றும் சோழவரசன் கூறுகிறான். வேடியரசனின் சேனை சைனியங்களையும் ஆண்மையைக் காவல்களையும் எடுத்துக் கூறித் தன்னையனுப்ப வேண்டாமென்று மீகாமன் சோழவரசனை இரக்கிறான். ஆனால் சோழவரசனே தனது நாடு நகரம் குடை கொடி முதலான வரிசைகள் யாவையும் மீகாமனுக்குப் பரிசாயளிப்பதாகக் கூறி நாகரத்தினத்தை எதுவிதமுங்கொண்டுவரும்படி மீகாமனை யேவுகிறான். எது சொல்லியும் ஒப்பாததைக்கண்ட மீகாமன் வேடியரசனிடம் போக ஒப்புக்கொண்டு செட்டிகளிடம் சேனையும் செலவும் கண்ணகையின் ஆசிர்வாதமும் பெற்றுக்கொண்டு வேடியரசனின் நாக நகருக்குப் போகப் புறப்படுகிறான்.

வேடியரசன் கொலுவிலிருக்கிறான். அவன் மனைவி நீலகேசி தன் தோழிகளுடனும் மந்திரியுடனும் வந்து தான் கண்ட தீய சொப்பனத்தை வேடியரசனுக்குரைக்கிறாள். நீலகேசியையும் தோழிகளையும் இராமேசுவரஞ் சென்று தீர்த்தயாடி பிராமணர்க்குத் தானதருமஞ் செய்து வரும்படி வேடியரசன் அனுப்ப அவர்கள் போகிறார்கள். பின்பு தன் சேனாதிபதியை யழைத்துத் தன் நகரியைக் காவல் செய்விக்கிறான்.

மீகாமன் கண்ணகையின் வரம் பெற்று நாகநகர் ஏகுகிறான். வேடியரசனின் மாலுமி மீகாமனையும் சேனையையும் கரையிலிறங்காதபடி தடுத்து அவன்வரவை வேடியரசனுக்கறிவிக்கிறான். வேடியரசன் மீகாமனைத் தன் சமுகத்துக்கழைக்க அவன் வந்து நாகரத்தினங் கேட்கிறான். வேடியரசன் வெகுண்டு மீகாமனைப் போருக்கழைக்க

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## புத்திர பாக்கியத்தை விரும்பியவர்கள் செய்யுங் கருமங்கள்

*பிரமஸ்ரீ ச.பொன்னுஸ்வாமிக்குருக்கள் சுதுமலை*

போசன பங்தியின் முதலிலே யிருந்தவன் தன்னுடன் கூட யிருந்தவர்கள் பார்த்திருக்கத் தான் முன்னதாகப் புசித்தல், ஒருவன் பார்த்திருக்க அவனுக்குக் கொடாமல் தாங்கள் மாத்திரம் புசித்தல், தன்னுடைய வேலைக்காறர் பார்த்திருக்கத் தான் மாத்திரம் அறுசுவைப் பதார்த்தத்தோடு திருப்தியாகப் புசித்தல் அவன் ஆலாகலமென்கிற நஞ்சை யுண்கின்றான் அன்றி அன்னத்தைப் புசிக்கவில்லை. ஒருவனுக்கு ஒருவிதம் மற்றொருவனுக்கு ஒருவிதமாகப் பந்தியில பரிமாறல், பந்தியில் விஷமம் பண்ணுகிறவன் இன்ன இன்ன திதி வாரங்களில் இன்ன இன்ன காய் கறி வகைகள் உண்ணலாம் உண்ணக் கூடாதென்பதை யறிந்து செய்யாமை. அவை வருமாறு:—

பத்துநாட்களுட்பட்ட ஈன்ற எருமைப் பசுவின் பால, தானாக வொழுகும் முலைகளையுடைய பசுவின் பாலும், கன்றிழந்த பசுவின் பால், இரட்டைசகன்றயீன்ற பசுவின் பால, இவைகளின் தயிரும் நெய்யும், உப்புக்கலந்த பாலும், தாமிர [செம்பு] பாத்திரத்தில் கறந்த பாலும், பிரதமைத்திதியில் பூசனிக்காயும, துதியைத் திதியில் கத்தரிக்காயும், திருதியைத் திதியில் சிறுகுறிஞ்சாவும், சதுர்த்தியில முள்ளங்கியும், பஞ்சமித்திதியில் விலவப் பழமும், சஷ்டித்திதியில புடலங்காயும, சப்தமித்திதியில நெல்லிக்காயும், அட்டமித்திதியில் ஆனைத்திற்பலியும், நவமித்திதியில் நீற்றுப் பூசனிக்காயும், தசமித்திதியில மாங்காயும், ஏகாதசித்திதியில் பாகற்காயும், துவாதசித்திதியில வாழைக்காயும், திரயோதசித்திதியில்எள்ளும், சதுர்த்தசியில புளியும், பர்வங்களில நெல்லிக்காயும் ஞாயிற்றுக்கிழமை இரவாவது பகலாவது நெல்லிக்காயும், வனைய இராக்காலத்தில நெல்லிக்காயும, இரவில் தயிர், வறுத்த அரிசிமா, எள்ளுக்கலந்த எவ்வகைகட்பட்ட பதார்த்தமும, இரவில் எலுமிச்சம் புளி சேர்ந்த பதார்த்தமும், உருக்கப்பட்ட வெண்ணெயின காந்தல், தயிரைக் கடைந்தபடியே தண்ணீர் கலவாத மோர், நெய்யின் மேல் தெளிவு, நெய் ஏடை, நுரை, உருசி கெட்ட மோர், இவைகளைப் புசிப்பவர்கள் எவர்களோ அவர்களிடத்திலுள்ள வீரியம், அழகு, அறிவு ஆகிய இவைகள குறையுமென்பதாம்.

அகத்திக் கீரையை மிகவும் விஷ்ணு பக்தியை விருத்திசெய்யும்படியான உத்தம வைஷ்ணவ சாகம் [கீரை] என்று சொல்லப்படும்.

பகலில் விழாமரத்தினிழலிலும், இரவில் தயிர் பாவித்தலும, பகலில பால் குடித்தலும, வன்னிமர நிழலில் ஒதுங்குவதும் சப்தமித்திதியில இரவும் பகலும் நெல்லிக்காயில் மூதேவி வசிப்பாள் எனக் கூறப்பட்டது. வெண்கலப் பாத்திரத்தில விட்ட இளநீரும், கண்காணும்படி பரிமாறப்பட்ட உப்பைப் புசித்தல், எள்ளுக்கலந்த எவ்வகைப்பட்ட பதார்த்தங்களும் இரவில் புசிக்கக் கூடாது. இரவில வறுத்த அரிசிமா பாவிப்பதுகூடா, செம்முருங்கைஉருண்ட முள்ளங்கி குப்பைக்கீரை தயிரும் மாவுக கலந்து சமைத்த பழைய பணிகாரம், வெள்ளைக்கத்தரிக்காய், உருண்டையான சுரைக்காய்

## ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள்

3ம் பக்கத் தொடர்ச்சி

றான்- நீலகேசி தடுத்தும் பயனில்லாது வெடியாசனுக்கும் மீகாமனுக்குமிடையிற் போர் நடக்கிறது மீகாமன் வெடியரசனைச் சிறைசெய்கிறான். நீலகேசி தன் மைத்துனன் வீரநாராயண தேவனுக்குச் செய்தி சொல்லியனுப்புகிறாள். வீரநாராயணன் தன் சேனைகளுடனே போர்க்களம்போகச் சித்தஞ்செய்கிறான்.

மீகாமன் நாகரத்தினங் கிடைக்குமோ கிடையாதோவென்று பிராமணனிடம்சாஸ்திரங்கேட்கப்பின்னவன்வெடியரசனைக்கொண்டு அரவத்திடம் நாகரத்தினம் கேட்பித்தால் கிடைக்குமெனக் கூறுகிறான. மீகாமன் அப்படியே செய்து நாகரத்தினத்தைப் பெறுகிறான்.

வீரநாராயணன் வந்து மீகாமனைப் போருக்கழைக்கிறான். இருவரும் போர்புரிகிறார்கள். வீரநாராயணன் மீகாமனை வெட்டுகிறான். மீகாமன் குற்றுயிராய் விழும்போது "கண்ணகையே" என்று ஓதுகிறான். கல்லுமுனிவன் களரிமீது வந்து உதிக்கிறான். மீகாமனும் உயிர் பெற்றெழுகிறான். கல்லுமுனிவன் ஓர் வேலாயுதத்தை மீகாமன கையிற் கொடுக்கிறான். மீகாமன வீரநாராயணனை அவ்வேலாயுதத்தால மடியச் செய்கிறான்.

வெடியரசனின் மறுதம்பி விளங்குதேவன் "கதிர்மணி பறித்து அலால் மனைவியவளிடஞ் சென்று கறிசோறருந்திடேனே" எனச் சபதஞ்செய்துகொண்டு போர்க்களரியிற் றோற்றுகிறான். போர்வீரகண்டனும் ஏரிலங்குருவனும் தத்தம் சேனைகளுடன் வருகிறார்கள். போர் நடக்கிறது. மீகாமன் தோற்று அஞ்சலியஸ்தனாகி நிற்கிறான். அவனைவெடியரசன முன்கொண்டு வருகிறார்கள். மீகாமனுனவன் கண்ணகைக்கு நாகரத்தினம் வாங்கும் பொருட்டாக சோழவரசன் அனுப்பிய தூதனேயல்லாது யுத்தஞ் செய்யக் காவாகவந்தவனலலன். ஆகவே, அவனை ஒன்றுஞ்செய்யாமல் நாகரத்தினத்தைக் கொடுத்து விடுங்களென வெடியரசன் கட்டளையிடுகிறான். தம்பிமார்களும் அப்படியே செய்கிறார்கள். மீகாமன நாகரத்தினத்தைப் பெற்றுக்கொண்டு சோழதேசஞ்செலல வெடியரசனுந் தம்பிமாரும் வீரநாராயணனின் ஈமக்கடனகளை முடித்துக்கொண்டு தத்தம் இருப்பிடம ஏகுகிறார்கள.

மாதிரிக்காக இருவிருத்தங்களையும் அவைகளுடன் சம்பந்தப்பட்ட இருவசனங்களையும் ஈண்டெடுத்துக் காட்டுதும.

### வெடியரசன் சொல்விருத்தம்

சண்டமாருதம்போலச் சாருமென்
றன் சேனையெல்லாஞ் சாய்ந்துபோகக்
கண்டகண்டமாய்த் தறித்துக் காசினி
யிலென்னையுங் நீ கடிதில் வென்று
கொண்டேகு நாகரத்தினம் குறைகளதின்பின்பதொன்றுங் கூறமாட்டேன்
அண்டமெடுத்தாட்டினுமசுண்டங்
காயொரு பொருட்டோவறைகுவாயே.

### வசனம்

ஆகோகேளடா மீகாமா, சண்டமாருதம்போலச் சீறிவரும் எனது சேனைகளையழித்து என்னையும் வெல்வாயானல் நாகரத்தினத்தை எடுத்துக்கொள். அப்படியானுற் குற்றஞ்சொல்லமாட்டேன். அல்லாமலும் அண்டத்தை எடுத்து கையில் வைத்து ஆட்டுகின்றவனுககுச் சுண்டங்காய் ஒரு பொருட்டோ சொல்லுவாயாக.

### மீகாமன் சொல்விருத்தம்

கலைக்கு வல்லயான் மகனே கண்ணகைக்காய்ப் பொறுத்திடென்றுன்
காலைப்பூண்டேன்
சிலைக்குவல்ல சேனைகொண்டு
செருக்களத்திற் கொல்லுவது நின்னமென்றாய்
மலைக்கு மண்ணுங்கட்டி கிகர்வைப்
பாரோ மாண்டாலும் வருவேன்காளை
தலைக்கு வெள்ளம் மேற்பட்டாற்
சாணென்ன முழமென்ன சாற்றுவீரே

அகோகேளும் ராசனே, கண்ணகைக்காகப் பொறுத்துக்கொள்ளுமென்று உமது பாதம் பணிந்தேன்; ஆனல் நீரோ விலவித்தை பயின்ற சேனைகளுடன் வந்து கொன்று போடுவேன் என்று வீராவேசமான வார்த்தைகளைப் பேசுகிறீர். நான்மாண்டுபோவது நிசமே என்கிலும் நான் நாளைக்குப் போர்செய்ய வருகிறேன். தலைக்கு மேற்பட்ட வெள்ளம் சாணென்னமுழமென்ன அறிவீராக

### பரந்து கிடக்கும் பழமொழிகள்

அக்காலத்தில் விருத்தங்கள் இயற்றுவோர் ஒவ்வொரு ஆணித்தரமான பழமொழியைக் கடைசியடியாக வைத்து இயற்றுவது இயல்புபோலும். அல்லது இந்நாடகாசிரியர் சிறப்பு விதிபோலும். அப்படியான பழமொழிகள் கொண்டபல விருத்தங்களையும் தராது பத்து விருத்தங்களிலுள்ள கடைசி அடிகளைமட்டும் இதன்கீழ்த் தருதும்.

1. கான்றோற்றுங்காக்கை கழுகிறந்தாப்போற் காசினியில் மிகவும் மைதக் கருதுவரோ, 2. குரைபெற்ற குதிரையின்வால் குண்டிமட்டல்லாது முண்டோ கூறுவாயே, 3. திரவியமெடுத்தசெட்டி கழுவிலிருந்தாச்சே, 4. இரும்புதனை விழுங்கினுலிஞ்சிச்சாறோ குடிப்பாரியம்புவாயே, 5. எலியறக்குமெனப் பயந்து எரிகொழுத்தி வீடுதனை யெரிப்பாருண்டோ, 6. சாட்சிசொல்லப்போனசெட்டி திக்குள் அகப்பட்டதுபோல், 7. அரையிலும்பத்தசிலைஅரவாய்க் கடித்தாற்போல, 8. கல்விளுவுயர் தூணைக் கறையான் வந்தரித்திடுமோ கலங்கிடாயே, 9 சாண்பிள்ளையாயிருந்தாலு மாண்பிள்ளை தானென்றமொழி தப்புக்காதே, 10. எள்ளுக்காய் பிளந்தாற்போல கியாபத்தை யியம்புவீரே.

இன்னொரு பாடலையும் ஈண்டெடுத்துக்காட்டாது இக்கட்டுரையை முடிக்க விருப்பமில்லாது அதனையும் காட்டுதும்.

### பறையர் தோற்ற விருத்தம்

கள்ளினைக்குடித்துக் கனவெறிபிடித்
துக் கயிலையினிறைச்சிகள் கடித்துக்
கவிகளைப் படித்துஅனவினிற் பிடித்
துக் கால்களையடிக்கடி மடித்து
வெள்ளிபோனுலைகள் வாயினுல்
வடித்து விரகினுற் றுலாப்படி பிடித்து
விதமொடு கிறுக்கு மனவிலொன்றெடுத்து விளங்கிடா வார்த்தைகடொடுத்து
உள்ளதோர்மொழியைப் பகிடியாய்
முடித்து மொதுங்கியு மொதுங்கிடா
நடந்து
முயர்குலங் நாங்கடி வள்ளுவர் முன்
னுதித்திடுகுலமெனத்துடித்துத்
தள்ளியே நடித்துக் கோலியப் பறை
யர் தங்களைக் கைகளாலிடித்துத்
தட்டியே பறையைக் கொட்டியே
யடித்துச் சாம்புவரெழுந்து வந்தனரே.

இந்நாடகாசிரியர் கதாபாத்திரங்களின் குண விசேஷங்களை ஏற்ற சொற்களாலெடுத்துக் காட்டுந்தன்மை உற்றுநோக்கத்தக்கது.

இவை முதலியவற்றைப் புசித்தால் வீரியக் குறைவால புத்திரபாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளாரகள்.


# பல் வைத்தியம்

## யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருஜ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

## குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5.8—31.12.43)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் ஒக் 5

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 துதிப்பாடல்கள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே ஸி காளிதாஸ்பாட்டு 9 முடிவு.

1கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி பாலம்மாள் பாட்டு 2 தமிழ்செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 பாலம்மாள் வீணை பாட்டு 5-45 இசைப்பயிற்சி 6 பி எம் நாராயண மாரார் எடக்கா 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள்7-45 வேண்டியதுதான் நாடகம் 8 மதராஸிலுள்ளபடி டி கே ராதாகிருஷ்ணன் புல்லாங்குழல் 9-15 அனுசூயா, வசந்தேசாய் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 கிளாரினெட். ஜலதரங்கம் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### புதன் ஒக் 6

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 நந்தன் சரித்திர கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி புரிகேசன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி முருகேசன் பாட்டு 2 தமிழ்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 பி கே விஸ்வநாத சர்மா வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 திருவையாறு டி வைத்தியநாத ஐயர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 அடிமைக்கூலி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7—45 வானொலி வாத்யகோஷ்டி 8 பி கே விஸ்வநாதன் வயலின் 8-30 அமெரிக்கவாக்கு டெல்லி அஞ்சல் 8-45 திருவையாறு டி வைத்தியநாத ஐயர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 வீணை, ஸிதார் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### வியாழன் ஒக் 7

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வாத்யக்கதம்பம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 பி எஸ் லலிதாபாய் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 கே சுந்தரராமய்யர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கே சுந்தரராமய்யர் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 பி எஸ் லலிதாபாய் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மாரியப்பஸ்வாமிகள் பாட்டு எம் எஸ் கணேசபிள்ளை வயலின் காரைக்குடி நடேசய்யர் மிருதங்கம் 9 பருவகாலம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கோட்டுவாத்யம் 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

# சைனதரிசனம்

(திரு. வ. கந்தையா, கொழும்பு வானொலியில் பேசியது)

சைனம் ஒரு மிகப் பழைய மதம். இஃது இன்றும் இந்தியாவில் உயர் நிலையில் உள்ளது. சாங்கிய மதம் போல சைனமும் புத்த பெருமானுக்கு முந்தியது. சைன மதக் கொள்கைகளை உண்டாக்கி வளர்த்த ஆசிரியன்மார் இருபத்துநால்வர். முதலாசிரியர் ரிஷபதேவர். இறுதியாசிரியர் வர்த்தமானர். இவர் புத்தர் காலத்தவர். வர்த்தமானர் மிக்க வீரத்தோடு தமது மதத்தை நிலைநாட்டி வந்த காரணத்தினால் அவரை மகாவீரர் என்ற பெயரினால் வழங்கி வருகின்றனர். ரிஷபதேவர் முதல் வர்த்தமானர் ஈறான 24 ஆசிரியன்மாரையும் தீர்த்தங்கரர் என்று சைனர் சொல்வது வழக்கு.

சைன என்ற தமிழ்ச்சொல் ஜின என்ற வடசொல்லின் சிதைவு. ஜின என்ற சொல்லின் பொருள் 'வெல்வோன்' என்பது. எவற்றை வென்றவர்கள்? வாழ்வில் எழும் விருப்பு வெறுப்புக்களை வென்றவர்கள். விருப்பு வெறுப்புக்களை வெல்லவே, மீளவும் பிறப்புக்கு ஏதுவான பந்தத்தையும் வென்றதாய் முடிந்தது, எனவே பிறவிநீங்கி முத்தி பெற்றனர்.

சைனமதத்திற்குக் கடவுளில்லை. பௌத்தர் புத்தபெருமானை வழிபடுமாறுபோல சைனரும் தீர்த்தங்கரரை வழிபடுவர். தீர்த்தங்கரரின் வாழ்வு வழிகாட்டியாகும். தீர்த்தங்கரராகிய அப்பெருமக்களும் சிறு மக்களாகிய நம்மைப்போல ஒருகால் வாழ்க்கைப் பந்தத்திற்கு உள்ளாகி, தந்தம் முயற்சியினால் விடுதலையடைந்தனர். அப்பெருமக்களின் வழியைக் கடைப்பிடித்தால் நாமும் வீடுபேறு எய்தலாம் என்பது சைனர் கொள்கை.

மதங்கள் உண்டாம்போது கட்சிகள் எழுதல் அரிது, காலம் செல்லச் செல்ல கட்சிகள் தலைகாட்டுவது வழக்கம். சைனமும் இவ்வழக்கத்திற்கு உள்ளாயது. சைனத் தொண்டர் தம்முள் மாறுபட்டனர். இருகட்சியாகப் பிரிந்தனர். ஒரு கட்சி திகம்பரர். மற்றைக்கட்சி சுவேதாம்பரர்.

திகம்பரரின்படி, துறவிகள் ஆடை, அணி, இல், யாவையும் துறந்து, இரந்துண்டு, தியானத்தில் ஆழ்ந்து வாழவேண்டும். முற்றறிவு பெற்ற துறவிக்கு உணவே வேண்டியதில்லை. திகம்பரப்பெண்ணுக்கு முத்தியில்லை. அவள் பின் ஆணாய்ப்பிறந்து முத்தியை அடையவேண்டும். திகம்பரமக்கள் ஆடை இன்றி எங்ஙனம் உணவு தேடித் திரியலாம் என்று நீங்கள் கேட்கலாம்.

அஃது ஒரு மதக் கொள்கை. மதக்கொள்கையில் மானம்பார்க்க முடியாது. சைன துறவிகள் இன்று யாதோர் உடையுமின்றி சாதியில் தெருத்தெருவாய்த் திரிகின்றனராம். அவர்கள் பெரும்பாலும் தம்மதத்தார் உறையும் சேரிகளிலேதான் உலாவுவர். பழந்தமிழ் நாட்டிலும் இவர்கள் இவ்வாறு உடையின்றி வீதிகளில் உலாவினர் என்பதற்குச் சான்று மணிமேகலையில் உளது. மலர்வனம் புக்க காதையில், "மணித்தேர் வீதியில் வருமந் நெறி வழி, சிமிலிக் கரணடையன் துறைக் காற் பிரயசினன், நாணமுமுடையும் நன்கனம் நீத்து" வந்தான் என்று வருதல் காண்க. திகம்பரன் என்ற சொல்லுக்கே 'உடையில்லாதவன்' என்பது பொருள்.

இனி மற்றைக் கட்சியினராகிய சுவேதாம்பரர், திகம்பரர் கொள்கையென இப்போது நான் சொல்லியவற்றுக்கு நேர்மாறு. வெள்ளைத் துகில் அணிவர். சுவேதாம்பரர் என்ற சொல்லுக்கே 'வெள்ளைத் துகிலணிவோர்' என்பது பொருள். சுவேதாம்பரப் பெண்களுக்கும் இப்பிறவியிலேயே வீடுபேறு எய்த உரிமையுண்டு. சுவேதாம்பரர் மக்களியல்பை நன்குணர்ந்தவர். இயல்புக்கு ஏற்ப விதி இயற்றியவர். அதன்படி ஒழுகியவர்.

### அறிவு வரும் வழிகள்

சைனர் கலைகளில் வல்லவர். இந்தியாவில் பல கலைகளையும் வளர்த்தவர். தமிழிலும் காவியக் கலையையும் இலக்கணக் கலையையும் உயர்வுற வளர்த்த வள்ளலார் சைனருமாவர் என்பதற்கு, சீவக சிந்தாமணி சிலப்பதிகாரம் மேருமந்திர புராணம் நன்னூல் முதலியன சான்று பகரும். தரிசன ஆராய்ச்சிக்கு மிகத் தேவையான தருக்கக் கலையை வளர்த்த முன்னணியாளருள் சைனரும் உளர். இந்து சமயிகர், பௌத்தர், சைனர் இவர் தருக்கத்தில் மேம்பாடுற்றவர்.

நமக்கு அறிவு வரும் வழிகள் மூன்றே மூன்று என்று அறுதியிட்டனர். அவை காட்சி, அனுமானம், ஆகமம் என்பன. உலகில் எந்த அறிவாயினும், பூவுலகைப்பற்றிய அறிவோ பூவுலகிற்கு அப்பாற்பட்டவற்றைப்பற்றிய அறிவோ, காட்சி அனுமானம் ஆகமம் ஆகிய மூன்று வழிகளால் மட்டும் வரலாம். இவ்வழிகளுக்குப் பெயர் அளவை, இவ்வழிகளால் வரும் உண்மை அறிவைக் கொள்ளவேண்டும்.

காட்சியால் வரும் அறிவு கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் உண்டும், மூக்கால் முகர்ந்தும், தோலால் தொட்டும் கொள்ளும் அறிவு. அனுமானத்தினால் வரும் அறிவு துயில்நீங்கி வெளியே வந்து முற்றம் நனைந்திருக்கக்கண்டு மழை பெய்திருக்கின்றது என்று உய்த்துணரும் அறிவு. ஆகம அறிவு தீர்த்தங்கரர் தந்த திருவாசகங்களை நம்பி, அவை கூறும் பொருள்களைக் கொள்ளும் அறிவு.

சார்வாகர் காட்சியளவை ஒன்றை மட்டும் கொண்டு, அனுமானம் ஆகமம் இரண்டையும் தள்ளினர். காட்சியளவையையும் தள்ளிவிடலாமே யென்று சைனர் வாதித்து சார்வாகரை மறுப்பர். கயிற்றைக் கண்ணால் கண்டு பாம்பெனக் கொள்வதும் காட்சியறிவு. அதனால் காட்சியளவையும் பொய் என்று உதாரணங் காட்டுவர்.

இனி விஷயங்களை முடிவு கொள்ளும் முறையில் 'சப்தபங்கய' என்ற எழுவகை உறுப்பு முறையைக் கையாளுவர். அவை, உளதுமாம், இலதுமாம், உள்ளதும் இலதுமாம் என 7 வகையாக வரும். யானையின்கால்கள் தூண்கள்போன்றிருப்பதால், 'யானை தூண் போன்றது' என்றுசொல்லல் ஆகாது என்பர். ஏன்? யானையின் காது சுளகு போன்றன. கை உலக்கை போன்றது. பிறவுமப்படியே. அதனால் ஓர் உறுப்புபற்றி முழுயானையையும் தூணுக்கு உவமை கூறி "யானை தூண்போன்றது" என்று முடிவு செய்தல் வழு என்பர். பின்னை எவ்வாறு சொல்ல வேண்டும்? 'ஒரு வகையில்' என்று அடை கொடுத்துச் சொல்லவேண்டும். அப்போது வாக்கியம் ஒரு வகையில் யானை தூணைப்போன்றது என வரும். அஃதாவது கால் வடிவத்தால் யானை தூண்போன்றது என்றுசொல்வது முறையாகும். உள்ளதுமாம்என்ற வாய்பாட்டில் 'யானை தூண்போன்றதுமாம்' என வரும். மற்றைய வாய்பாடுகளையும் இவ்வாறு விளக்கினால் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் யாவரும் எளிதில் கொள்ளார்கள் என்பது பற்றி இத்துடன் விடுகிறேன்.

#### உலகம்

இனி, உலகத்தைப் பார்க்கும்போது உயிருள்ளனவும் உயிரில்லாதனவும் இருப்பதைப் பார்க்கிறோம். அதனால் உலகை, உயிரல்லனவும் உயிரும் என இரண்டாக வகுத்தனர். உயிரைச் சீவன் என்றும், உயிரல்லனவற்றை சீவனல்லாதது [அஜீவ] என்று வழங்கினர். முதலில் சீவனல்லாத பகுப்பைப் பார்ப்போம்.

சீவன் இருத்தற்கு இடமாயுள்ளது உடல். உடல் எவற்றால் உண்டாயது பிழம்பினால் ஆயது. பிழம்பு என்பது சடப்பொருள். பிழம்பைச் சைனர் 'புட்கல' என்றனர். பௌத்தம் முதலிய பிறதரிசனங்களில் புட்கல என்பது உயிர். புட்கல என்ற சொல்லுக்கு கூடுதலும் கலைதலும் என்பது பொருள். நிலம், நீர், நெருப்பு, காற்று நான்கு பூதங்களும் கூடுதல் உடலாதற்கு முதற்காரணம். இப்பூதங்களினின்று உண்டாய செய்கைகளே மனம், மூச்சு, வாக்கு என்பன.

ஆகாயம் ஒரு பூதமன்று. பிழம்பின் மாறுபாட்டால் எழும் ஒலி, சூடு, நிழல், இருள், கூட்டம், நீக்கம், வன்மை, மென்மை, வடிவு முதலிய குணங்கள்போல சத்தமும் ஒரு குணம். அதனால், மற்றையோர் கொள்வதுபோல ஆகாயத்தின் குணமன்று.

ஆகாயம் பூதமல்லவென்றேன். பின்னை அஃது யாது? இடம். நாம் இயங்குதற்கு இடம் வேண்டும். நாம் இயங்குதற்கு இடமே ஆகாயம். இயங்குதற்கு இடம் ஏதுவாதலால் இதனை ஒரு துணைக் காரணம் என்பர்.

இனிக் காலம். காலமும் ஒரு துணைக்காரணம். குழந்தை வளர்ந்து கணவனாதற்குப் கிழவனாதற்கும் காலம் வேண்டும். காலம் என்பது ஒன்றில்லையேல், குழந்தை என்றும் குழந்தையாகவே இருக்க வேண்டும். அதனால் காலமும் வேண்டியதாயிற்று.

இனி அசைவும் நிலையும். நாம் நடத்தல் அசைவு. நாம் ஆடாமல் அசையாமல் நிற்றல் நிலை. மீன் அசைவதற்குக் காரணம் யாது? நீர். நீரைவிட்டு நிலத்தில் விட்டால் அசையாது கிடக்கும். ஆதலால் மீன் அசைதற்குத் துணைக்காரணம் நீர். அசைவு என்னும் தொழில் அசையாமல் துயிலும் நண்டை அசையப்பட செய்வதில்லை.

ஆணி நிலை. பானை அடுப்பில் அசையா நிலையில் உள்ளது. அடுப்பு நிலையெனப்படுவது. ஆனால் அது அசைவைத் தடுப்பதில்லை. கஞ்சி வடிக்க முயலும் கன்னி பானையைச் சரிக்கின்றாள். நிலையாகிய அடுப்பு பானையைத் தடைசெய்வதில்லை. நிலையும் பானை அசையாது நிற்றற்குத் துணைக்காரணம்.

அசையும் நிலையும் சைனர் வழக்கில் தர்மம் அதர்மம் எனப் பெயர் பெறும். அச்சொற்களுக்கு அறம் மறம் என்று பொதுப்பொருள் கொள்ளல் தவறு.

இதுவரை சீவனல்லனவற்றின் பாகுபாட்டைச் சொல்லிவந்தேன். நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகிய பூதங்களும், ஆகாயமும், காலமும், தர்மம், அதர்மம், பொருள்கள் எனப்படும். இவையே சீவனல்லன.

#### சீவன்

இனி, சீவன்தான் யாது? சீவன் ஒரு பொருள். சீவனல்லனவாகிய பொருள்போல சீவனும் ஒரு பொருள். சீவன் உணர்வுடைய பொருள். சீவனைக் காட்சியாலும் அறியலாம் என்கின்றனர். எப்படி? ஒரு மாம்பழத்தின் வடிவம், நிறம், மணம் இவற்றைக் காட்சியளவையால் அறிந்த அளவில் மாம்பழம் இது எனச் சொல்லுகின்றோம். அதுபோல, சீவனின் குணங்களாகிய இன்ப துன்பங்களை உணர்ந்த அளவிலே ஆன்மாவைக் காண்கின்றோம் என்பர்.

அனுமானத்தினாலும் சீவன் உண்டென வதிக்கமுடியும். பிழம்பைக் கூட்டி உடலாக்குதற்கு ஒரு கருத்தா வேண்டும். உணர்வில்லாதனவற்றை உணர்வுடையதொன்றே கூட்டும். உணர்வுடையதொன்று இல்லையேல் உடலும் பொறிகளும் இயங்கா'

சீவன் ஒன்றல்ல. பல. ஒவ்வொரு உடலிலும் ஒவ்வொரு சீவன் உண்டு. மிருகம், மரம், புல், பூண்டிலும் உள்ளதல்லாமல் சிறு தூசிலும் சீவன் உண்டென்பர். சீவன் உள்ளனவற்றின் இனவேறுபாட்டில் உணர்வு வேறுபாடுண்டு. மரத்தில் தோல்பொறியொன்றேயுள்ளது. மரத்தைத் தொட்ட அளவில் அதற்கு உணர்ச்சியுண்டு. சில மிருகங்களுக்கு கண் பொறியும் தோல்பொறியும் உள. சிலவற்றிற்கு மூன்று பொறிகள் உள. சிலவற்றிற்கு 4 உள்ளன. மக்களுக்கும் சில மிருகங்களுக்கும் 5 பொறிகள் உள. பொறியுணர்விருக்கும் சீவன் தன் தூயநிலையில் முற்றுணர்வு கொள்ள முடியாமல் கட்டுப்பட்டுளது. முற்றுணர்வு, முடிவிலின்பம், முடிவிலாற்றல் சீவனுக்கு இயற்கையாய் அமைந்த குணங்கள். சீவனுக்கு இவற்றை எய்த ஏலும். இவற்றை எய்த முடியாமல் தடுப்பன வினைப்பயன்கள். தெருவில் போகின்ற மோட்டக்காரை நம் கண்ணுக்கு மறைப்பது தூசித்திரள். வினைப்பயன்களும் காமமோகமாகிய தூசித்திரளை எழுப்பி, சீவனுக்குத் திரையிடுகின்றன. வினைப்பயன்களை வெட்டிய பின் சீவன் உடலவாவை விடுகின்றது. விட்டஞான்று முத்தியடைகின்றது. முத்தி சீவனின் தூய நிலை.

---

## நம் கோயில்களும் கும்பிடுவோரும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூத்துப்பார்ப்போர் கூடியும் விட்டமையே. சைவப்பற்று குறைந்துவிட்டது. அல்லது புலோலிப் பசுபதீசுவரர் கோயிலில் நடந்த திருட்டுத்தொழிலைக் கண்டுபிடிக்க என் செய்தோம்? இந்துசாதனத்தில, பத்திராதிபர் கூற்றாக இருமுறை வெளிவந்ததைப் படித்தும் மௌனம் சாதிக்கின்றோமே; முதலாக இத்திருட்டைக் கண்டுபிடிக்க பிரயத்தனம் செய்யவேண்டும். இரண்டாவதாக இனிமேல் இப்படி நடவாது காவல்புரியவேண்டும். சைவாபிமானிகளே! ஒவ்வொரு கோவிற் கிராமத்துக்குஞ் சேர்ந்தவரும் அயற்கிராமத்திலுள்ளவர்களும் ஒன்று சேர்ந்து ஒரு காவற்படை சேர்க்கவேண்டும். அவர்கள் முறையாகக் காவல்செய்யவேண்டும். சிவபூதிச் செல்வர்காள்! விழித்து இவ்விஷயத்தில முயலுங்கள்.

"உடலவாழ்வுகொண் டென்செய் தீர்நாணிலீர், கடலைசேர்வதுசொற் பிரமாணமே; கடலினுஞ்சுழுது அடைவர் கைவிட்டால, உடலினார் கிடந் தூர்முனி பண்டமே" — அப்பர்.

இங்ஙனம்
18-9-43, அ. கனகசபாபதி.

## ருஷிய அரங்கத்தில் ஜர்மனியரின் எதிர்ப்பு அதிகரிக்கிறது.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீப்பர் நதியின் இடது கரையில் கீவுக்கும் நீப்ரோபெட்ரோவ்ஸ்கிற்குமிடையேயுள்ள பிரதேசம் பூராவிலுமிருந்து ஜெர்மானியர் ஒழிக்கப்பட்டுவிட்டனர். ருஷ்யர் மேற்குக் கரையைத் தாக்குவதற்குப் படைகளைச் சீர்திருத்தியமைத்துத் தயாராயிருக்கின்றனர்.

### ஜேர்மன் படைகளுக்கு ராணுவ பீட உத்தரவு

என்னதான் கஷ்டம் நேர்ந்தாலும் விட்டுக்கொடுக்காது நின்று போர்புரியும்படி விட்டெப்ஸ்க் ஓர்ஷா மொகிலெவ், கொமெல் பிராந்தியத்திலுள்ள எல்லா ஜெர்மன் படைகளுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நீப்பர் நதியின் இரு கரைகளிலும் படைகள் இருந்துகொண்டு போராடுகின்றன. நீப்பர் நதிக் கரையில் 400 மைல் தூரத்துக்கு ஆயிரக்கணக்கான பீரங்கிகள் இக்கரையிலிருந்து அக்கரைக்கும், அக்கரையிலிருந்து இக்கரைக்குமாகக் குண்டுகளைப்பொழிகின்றன.

சோவியத் விமானப்படையைச் சேர்ந்த வெடிகுண்டு விமானங்கள் சத்துருவின் மேற்குக்கரைப் பாதுகாப்புகள்மீது இரவுபகலாக வெடிகுண்டுகளை வீசித் தாக்குகின்றன.

---

### வங்காளத்துக்கு ஒரிஸா அரிசி

வங்காளத்தி லேற்பட்டிருக்கும் கொடிய பஞ்சத்தைச் சமாளிப்பதற்காக ஒரிஸாவிலிருந்து பல்லாயிரக்கணக்கான தொன் எடையுள்ள அரிசியை அனுப்புவதற்கு ஒரிஸா அரசாங்கத்தாருக்கும் வங்க அரசாங்கத்தாருக்குமிடையில் ஒப்பந்தம் பூர்த்தியாகிவிட்டதென்று கல்கத்தாச் செய்தியொன்று கூறுகிறது.

இந்தச் 'சப்ளை'கள் மிகச் சீக்கிரம் வங்காளத்துக்குச் சேர்ந்து விடும். வங்காளத்தின் நிலைமையைப் பூரணமாக அறிந்துகொள்வதற்காக கவர்னர் கிராமங்கள் தோறும் சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார். பிச்சைக்காரர்கள்தான் பஞ்சத்தினால் மடிவதாக அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது. கிராமங்களில் நிலைமை திருப்திகரமாகவே இருப்பதாகவும் அரசாங்கத்தாரின் கஞ்சித் தொட்டிகளுக்குப் போதிய சப்ளை கிடைப்பதில் கஷ்டமிருப்பதாகவும், பட்டினியால் கல்கத்தா ஆஸ்பத்திரியில் நேற்று 81 பேர் இறந்துவிட்டதாகவும், பட்டினியால் இறப்பவர்களின் தொகை அதிகரித்து வருவதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

---

### "இந்தியருக்கு பிரிட்டன்மீது அவநம்பிக்கை"

தொழிற்கட்சி அங்கத்தவரின் கூற்று

லண்டன் செப் 30—

"இந்திய சுதந்திரத்துக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக லண்டனில் நிறுவப்பட்டிருக்கும் கௌன்ஸிலின் கூட்டம் ஒன்று நடைபெற்றபோது இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கும் ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்திய சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டு நேசதேசங்கள் ஒரு பிரகடனம் வெளியிடுவதற்கு முற்போக்குள்ள அமெரிக்கர்களைச் சந்தித்துப் பேச வாஷிங்டனுக்குச் செல்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதியைப் பெறவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. தொழிற்கட்சியில் ஒரு அங்கத்தவரான திரு. சோவ பேசுகையில் கூறியதாவது:-

"இந்திய முட்டுக்கட்டை தீர வேண்டுமாயின், இந்திய சுதந்திரத்தை பிரிட்டன் மாத்திரமன்றி, நேசதேசங்களெல்லாம் அங்கீகரித்து உத்தரவாதம் செய்ய வேண்டும். கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்களால் இந்தியருக்கு நம்மீது அவநம்பிக்கை அதிகரிக்கின்றது. இந்தியா இந்தியர்களுக்குச் சொந்தமாகும். இந்தியா விடுதலை செய்யப்படாவிடில் இந்த யுத்தம் ஒரு ஏகாதிபத்திய யுத்தமாகிவிடும்.

தொழிற்கட்சிக்கு பிரிட்டன் அனுமதியளிக்குமா வென்பதைப் பற்றித் தமக்குத் திட்டமாகக் கூற முடியாதென்று மிஸ்டர். சோவ குறிப்பிட்டார்,

---

### சைவப் பிரசங்கம்

நிகழும் புரட்டாதிமாசம் 20ந் திகதி (6-10-43) புதன்கிழமைமாலை 7 மணியளவில் அராலி கிழக்கு முத்துமாரி அம்பாள் கோவில் மண்டபத்தில் உடுவில் சிவஸ்ரீ த. முத்துச்சாமிக் குருக்களவர்களால் "நவராத்திரி" என்னும் விஷயத்தில் ஓர் விரிவுரை நிகழ்த்தப்பெறும் என அறிகிறோம்.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிரூப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)


## விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

| | |
|---|---|
| ஒரு கலம் ரூபா 10-00 | அரைக்கலம் ரூபா 5-50 |
| கால் கலம் ரூபா 4-00 | ஒரு அங்குலம் ரூ. 1-00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.


## அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காத்திரப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆதிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம் (மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆதிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளயதுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)



குறைந்த விலையில் **துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.


## விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை


## பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதந் தொடக்கமாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்

சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச் சிறிது உயர்த்தியுள்ளார்:-

| | | | |
|---|---|---|---|
| இந்துசாதனம் தமிழ்ப்பிரதி, | வருடமொன்றிற்கு | பட்டின எல்லையுள் | 6.50 |
| ,, ஆங்கிலப்பிரதி | ,, | ,, | 6.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | ,, | ,, | 10.50 |
| தமிழ்ப்பிரதி | ,, | பிறவூர்கட்கு | 9.50 |
| ஆங்கிலப்பிரதி | ,, | ,, | 9.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | ,, | ,, | 13.50 |

தனிப்பிரதி 7 சதம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 4, October, 1943.